| தேர்வு எண் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

# SSLC முதல் திருப்புதல் தேர்வு 2019 - 20

## தமிழ்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள்: 100

பகுதி – I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15X1=15

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, ----- வரிசை, தமிழ் அல்லாத பிற மொழிகளில் இல்லை.

அ) ஒரு பொருள் பல சொல் ஆ) பல பொருள் ஒரு சொல்

இ) ஒன்றொழிப் பொதுச்சொல் ஈ) ஓரெழுத்து ஒருமொழி

2. 'வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்களில் ஆயுள் பெருக்கம் உண்டாம்' - இப்பாடல் அடிகளுக்கு உரியவர் ---.

(அ) இளங்கோவடிகள் (ஆ) கம்பர் (இ) ஔவையார் (ஈ) திருமூலர்

3. 'ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு' என்று சொன்னவர் -----.

(அ) பாரதி (ஆ) மணவை முஸ்தபா (இ) கவிமணி (ஈ) ம.போ.சி

4. சங்க இலக்கிய அறங்கள் இயல்பானவை. 'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு' என்று கூறியவர் யார்?

அ) அர்னால்டு ஆ) ஏணிச்சேரி முடமோசியார்

இ) ஜி.யு.போப் ஈ) மாங்குடி மருதனார்

5. பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் -----.

(அ) முல்லைப்பாட்டு (ஆ) மதுரைக்காஞ்சி (இ) நெடுநல்வாடை (ஈ) திருமுருகாற்றுப்படை

6. சேரமான் காதலி என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் ------.

(அ) புதுமைப்பித்தன் (ஆ) ஜெயகாந்தன் (இ) தி.சோ.வேணுகோபாலன் (ஈ) கண்ணதாசன்

7. செய்யுளில் ஓசை குறையாதவிடத்தும் இனிமையான ஓசைக்காக வரும் அளபெடை, ----- அளபெடை ஆகும்.

(அ) இன்னிசை (ஆ) சொல்லிசை (இ) இசைநிறை (ஈ) ஒற்றளபெடை

8. குலசேகர ஆழ்வார், 'வித்துவக் கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார், பால்சோற்றைக் கண்டதும் வருகிறார். இத்தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே -----, -----.

(அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி (ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி

(இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி (ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

9. காலங்கரந்த பெயரெச்சம் -----.

(அ) வேற்றுமைத் தொகை (ஆ) வினைத்தொகை (இ) உம்மைத்தொகை (ஈ) பண்புத்தொகை

10. முல்லை நில பறை -----

(அ) மீன்கோட்பறை (ஆ) ஏறுகோட்பறை (இ) தொண்டகம் (ஈ) துடி

11. தீவகம் என்னும் சொல்லின் பொருள் ----- .

(அ) விளக்கு (ஆ) நெருப்பு (இ) காற்று (ஈ) வெம்மை

பாடலைப் படித்துணர்ந்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்

12. இப்பாடலின் ஆசிரியர் யார்?

(அ) கம்பர் (ஆ) இளங்கோவடிகள் (இ) கண்ணதாசன் (ஈ) அதிவீரராம பாண்டியர்

13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்?

(அ) காசிக்காண்டம் (ஆ) கொய்யாக்கனி (இ) சிலப்பதிகாரம் (ஈ) கம்பராமாயணம்

14. வண்ணமும் சுண்ணமும் – இலக்கணம் தருக.

அ) எண்ணும்மை ஆ) வினைமுற்று இ) பெயரெச்சம் ஈ) தொழிற்பெயர்

15. விரை என்பதன் பொருள் ——————.

(அ) மனம் (ஆ) மணம் (இ) உள்ளம் (ஈ) மேகம்

**பகுதி – II (மதிப்பெண்கள் 18)**

பிரிவு 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **4x2=8**

**21–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. விடைக்கேற்ற வினாவினை அமைக்க.

அ) 1948 ஆகஸ்டு எட்டாம் நாள், இந்திய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்க புனித நாளாகும்.

ஆ) முதலாம் இராசராசன் காலம் தொட்டு மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டன.

17. செறுநர் செருக்கறுக்கும் ஆயுதம் எது?

18. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

19. குறிப்பு வரைக. – 'அவையம்'

20. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

21. 'குற்றம்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5x2=10**

22. இன்னாசியர் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்பவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

**(தொடர் சொற்றொடராக மாற்றுக)**

23. **பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறியிடுக.**

அரசால் நிறுவப்படும் கட்டடங்களில் சிலைகளில் நிறுவியவர் பெயர் நிறுவப்பட்ட காலம் நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள் இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை அதுபோலவே கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம் பெற்றிருக்கும்

24. **அகராதியைக் கண்டு பொருள் எழுதுக.**

i) கட்புள் ii) அடவி

25. **வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.**

பறவைகளுக்கு பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்றிருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும், நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறுமளவும் இருக்கும்.

26. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு, மழைக்கால மாலையில் சூடாக உண்ண, சுவை மிகுந்து இருக்கும்.

**இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.**

27. தீவக அணியின் வகைகள் யாவை?

28. நோக்கிய – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி – III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு 1

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.** **2x3=6**

29. தலையைக் கொடுத்தேனும் தலைநகர் காப்போம் – இடம் சுட்டிப் பொருள்தருக.

30. விருந்தை எதிர்கொள்ளும் தன்மையைக் கூறுக.

31. பாவை குறித்த செய்திகள் சங்ககாலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. திருக்குறளில் மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவாசகத்திலும் பட்டினத்தார் பாடலிலும் தோற்பாவைக் கூத்து பற்றிய செய்திகளைக் காண முடிகிறது. ஊரூராகச் சென்று நிகழ்த்துகிற கூட்டுக் குடும்பக் கலையாகத் தோற்பாவைக் கூத்து விளங்குகிறது. தோற்பாவைக் கூத்தானது கையுறைப்பாவைக் கூத்தாகவும், பொம்மலாட்டமாகவும் மாற்றம் பெற்றுள்ளது.

அ) மரப்பாவையைப் பற்றி குறிப்பிடும் நூல் எது?

ஆ) பாவை குறித்த செய்திகள் தமிழ் இலக்கியங்களில் எப்போதுவரை காணப்படுகிறது?

இ) தோற்பாவைக் கூத்தின் மாற்று வடிவங்கள் எவை?

### பிரிவு 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2x3=6**

**34–வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. கூத்தனைக், கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33. உயிர்கள் தோன்றி நிலைபெற்ற நிகழ்வை பரிபாடல் வழிநின்று கூறுக.

34. "அருளை பெருக்கி" எனத் தொடங்கும் நீதிவெண்பாப் பாடலை எழுதுக. **(அல்லது)**

"வெய்யோன் ஒளி" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

### பிரிவு 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2x3=6**

35. தொகைநிலைத் தொடர்களைச் சான்றுடன் கூறுக.

36. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. தீவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## பகுதி – IV (மதிப்பெண்கள் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5x5=25**

38. (அ) நம் பாடப் பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக. **(அல்லது)**

(ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. (அ) நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.

**மகளிர் நாள் விழா**

**இடம் : பள்ளிக் கலையரங்கம்** **நாள் : 08.03.2019**

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் – தலைமையாசிரியரின் வரவேற்பு – இதழாளர் கலையரசியின் சிறப்புரை. – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத் தலைவரின் நன்றியுரை.

**(அல்லது)**

ஆ) நம் ஊருக்குக் குடிநீர் வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று வரைக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பப் படிவம் நிரப்புக.

42. (அ) தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக்கொண்டிருக்கும் தம்பி.

திறன்பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை.

காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்.

எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியப்படி இருக்கம் தோழி.

இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.

(அல்லது)

(ஆ) மொழிப்பெயர்க்க:

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Raamayana, Mahabhartha and other ancient puranas . There are more songs in the play with dialogues improvised by the aritists on the spot. Fifteen to twenty atcors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

## பகுதி – V (மதிப்பெண்கள் 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும். **3x8=24**

43. (அ) சங்க இலக்கியங்கள் கூறும் தமிழரின் கொடைதிறம் பற்றிய கருத்துகளை எழுதுக. **(அல்லது)**

(ஆ) தமிழ்ச்சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கிற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரை குறிப்புகளை எழுதுக.

44. (அ) 'பாய்ச்சல்' கதை உணர்த்தும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**

(ஆ) உரைநடையிலும் அணிகலன் உண்டு என்பதை எழில்முதல்வனின் கூற்றில் நின்று விளக்குக.

45. (அ) தமிழ் இலக்கிய வளம் – கல்வி மொழி – தமிழுக்குச் செழுமை – மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்க கட்டுரை எழுதுக. **(அல்லது)**

(ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை – சுற்றுச்சூழல் பாதுகாப்பு – நிலம் மாசுபடுதல் – நீர் மாசுபடுதல் – காற்று மாசுபடுதல் – கட்டுப்படுத்தும் வழிகள் – இயற்கையைப் பாதுகாத்தல் – முடியுரை.

| தேர்வு எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|

**41. விண்ணப்பப்படிவத்தை நிரப்புக.**

**மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

**சேர்க்கை எண் :** **தேதி :** **வகுப்பும் பிரிவும்:**

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர்/ பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :
9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவெண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணக்கு | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : <u>ஆம், இணைக்கப்பட்டுள்ளது.</u>
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ/மாணவியின் கையெழுத்து